**செய்தி வெளியீடு எண்: 032** **நாள்: 13.01.2020**

## செய்தி வெளியீடு

மாற்றுத்திறனாளிகளும் பிறரைப்போல் சமஉரிமை மற்றும் வாய்ப்புகளுடன் சமுதாயத்தில் முழுப்பங்கேற்பு வகிக்கும் நோக்கத்தில் தடையற்ற சூழலை உருவாக்கும் நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகள் சம உரிமை சட்டம் 2016 ன்படி, மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகளை பாதுகாக்கவும், இவ்வாணையரகத்தில் செயல்பட்டு வரும் வழக்காடு மன்றத்திற்கு வரும் வழக்குகளை பதிவு செய்து வாதாடிடவும், தொகுப்பூதிய அடிப்படையில் தகுதியான ஒரு சட்ட ஆலோசகர் (Legal Consultant) மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான புதிய திட்டங்களை மாவட்ட அளவில் உருவாக்கி செயல்படுவதற்காக உலக வங்கி மற்றும் UNICEF போன்ற நிறுவனங்களிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று திட்டங்களை செயல்படுத்திட தொகுப்பூதிய அடிப்படையில் தகுதியான ஒரு திட்ட ஆலோசகர் (Project Consultant) பணிநியமனம் செய்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

**சட்ட ஆலோசகர்** பணியிடத்தில் பணிபுரிய கீழ்க்காணும் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும். இவர்களுக்கு மாத ஊதியமாக ரூ.50,000 முதல் ரூ.75,000 வரை வழங்கப்படும்.

1. அரசு அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தில் B.L / L.L.B பட்டபடிப்பு பயின்று இருக்கவேண்டும்.
2. குறைந்தது 3 கட்சிகாரர்கள் பெயர்கள்,முகவரிகள், தொடர்பு நபர்கள், தொலைபேசி எண்கள் உள்ளிட்ட தனியரின் சட்ட அனுபவத்தை பற்றி விவரிக்க வேண்டும்.
3. பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தில் குறைந்தது 5 வருடம் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். திட்டங்கள் மற்றும் அரசு நிதியளிக்கும் சேவைகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் நாளன்று 35 வயது பெற்றிருக்க வேண்டும்.
5. தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
6. ஒப்பந்த காலம் 1 வருடமாகும். செயல்திறன் மதிப்பாய்வின் அடிப்படையில் 3 வருட காலத்திற்கும் நீட்டிப்பு செய்யப்படும். மேலும், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் சட்ட ஆலோசகர் பணியினை 15 நாள்கள் முன் அறிவிப்புடன் நிறுத்தலாம்.

**திட்ட ஆலோசகர்** பணியிடத்தில் பணிபுரிய கீழ்க்காணும் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும். இவர்களுக்கு மாத ஊதியமாக ரூ.50,000 முதல் ரூ.75,000 வரை வழங்கப்படும்.

1. அரசு அங்கீகாரம் பெற்ற பல்கலைகழகத்தில் Social work / Sociology / B.A / Psychologist / Economics ஆகிய ஏதாவதொரு படிப்புகளில் முதுகலை பட்டப்படிப்பு பயின்று இருக்க வேண்டும்.
2. குழந்தைகள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள் அல்லது பிற பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். சமூக துறையில் வெற்றிகரமான திட்ட மொழிவுகளை தயாரிப்பதில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
3. பதிவு செய்யப்பட்ட இலாப நோக்கற்ற நிறுவனத்தில் பணி அனுபவம் உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும். மேலும் அரசு கார்ப்பரேட் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்கள் போன்ற பல்வேறு மூலங்களிலிருந்து குறைந்த பட்சம் 20 கோடி ரூபாய்க்கு திட்ட நிதியை திட்டங்களுக்கு திரட்டும் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
4. விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் நாளன்று 35 வயது பெற்றிருக்க வேண்டும்.
5. தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
6. ஒப்பந்த காலம் 1 வருடமாகும். செயல்திறன் மதிப்பாய்வின் அடிப்படையில் 3 வருட காலத்திற்கும் நீட்டிப்பு செய்யப்படும். மேலும், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் திட்ட ஆலோசகர் பணியினை 15 நாள்கள் முன் அறிவிப்புடன் நிறுத்தலாம்.

மேற்காணும் தகுதிகளை பெற்றிருக்கும் நபர்கள் விண்ணப்பங்களை 28.01.2020 க்குள் **திரு.ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் என முகவரியிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம், லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம், காமராஜர் சாலை, சென்னை–5** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மற்றும்**
**மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**